# சிறுவர் கதை விருந்து



ஆக்கம் :
P.P. அந்தோனிப்பிள்ளை

# சிறுவர்கதை விருந்து



ஆக்கம் :

**P.P அந்தோனிப்பிள்ளை**

நூலின் பெயர் : **சிறுவர்கதை விருந்து**

நூலாசிரியர் : P.P அந்தோனிப்பிள்ளை

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

முதற் பதிப்பு : 2010 மே

கணனி வடிவமைப்பு : **SHARLEE GRAPHICS**
Colombo 13.

விற்பனை : **லங்கா புத்தகசாலை**
F.L. 1/14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12.
Tel : 011-2341942
Fax : 011-2459431

# முகவுரை

பாலர்கள் சிறுவர்களுக்கான கதைகள் நீண்ட காலமாகக் குழந்தைகளுக்குக் கூறப்பட்டு வந்தன பழைய கதைகளே மீண்டும் மீண்டும் மாறாமல் அல்லது சில மாற்றங்களுடன் கூறப்பட்டும் . புத்தகங்களாகவும் வெளிவந்துள்ளன. சில வெளியீட்டாளர்கள் கவர்ச்சியான புதிய புதிய படங்களைச் சேர்த்து வந்துள்ளனர்.

இன்றைய உலகில் ஏற்படும் நவீன மாற்றங்களுக் கேற்பப் பாலர், சிறுவர் கல்வியிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஏனைய துறைகளைப் போலவே ஆரம்ப வகுப்புச் சிறுவர்களுக்கான கதைகள், பாடங்களிலும் மாற்றம் ஏற்பட வேண்டியுள்ளது. இந்த வகையில் எழுதப்பட்டுள்ள சிறுவர்கதை விருந்து, பாலர் கதை விருந்து ஆகிய எனது நூல்கள் ஆசிரியர் பெற்றோர் சிறுவர் மத்தியில் பெரிதும் வரவேற்கப்படும் என எண்ணுகிறேன்.

**P.P. அந்தோனிப்பிள்ளை**
ஆத்திக்குழி,
முருங்கன்.

# பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | மனமாற்றம் | 05 |
| 2. | புத்திசாலி நண்பன் | 9 |
| 3. | உண்மையான சேவை | 14 |
| 4. | மூத்தோர் அறிவுரை | 17 |
| 5. | சாமிவந்த சாமிக்கண்ணு | 20 |
| 6. | வழிகாட்டிகள் | 23 |
| 7. | கதைக்கேட்டவன் | 25 |
| 8. | ஆற்றல்கள் | 27 |
| 9. | காட்லா தங்கக் கரை | 29 |
| 10. | கூட்டுறவு | 32 |

# 1. மனமாற்றம்

அருள் நேசன் ஐந்தாம் வகுப்பில் கற்றுக்கொண்டிருக்கும் மாணவன் வகுப்பில் சிறந்த மாணவனாகிய அருள்நேசன் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். செட்டிகுளப் பிரதேசத்தைச் சேர்ந்தவன். எல்லோரும் எதிர்பார்த்திருந்ததைப் போல அவ்வருட ஐந்தாம் வருடப் புலமைப் பரிசில் பரீட்சையில் அம்மாவட்டத்திலே அதி கூடிய புள்ளிகளுடன் சித்தியடைந்திருந்தான். இதுவரை உள்ளூர்ப் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தான். உயர் தரப்பாடசாலையில் படிப்பதற்கு வாய்ப்புக்கிடைத்தபடியால் வவுனியாவிலுள்ள தேசிய கல்லூரிக்கு விண்ணப்பித்துச் சேர்ந்து விட்டான்.

உயர்தரப் பாடசாலை ஒன்றில் படிப்பது என்பது சாதாரண வருமானமுள்ள குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவனுக்குச் சிரமமானதாகவே இருந்தது. புலமைப் பரிசிலுக்குரிய பணமும் வரக் காலதாமதமாகும் ஆரம்பச் செலவுகளுக்குத் தகப்பன் வேதநாயகம் கடன் பட்டுத்தான் செலவழித்தார். வகுப்புக்கள் உயர உயர உடுப்பு மற்றும் இடையிடையே இடம் பெறும் பிரியா விடைகள் விழாக்களுக்கும் மேலதிக செலவுகளும் ஏறிக் கொண்டுபோனது.

எப்படியோ ஓ. எல் சாதாரண தரத்தில் விசேட சித்திகளுடன் சித்தியடைந்த அருள்நேசன் ஏ. எல் பரீட்சையிலும் மூன்று பாடங்களிலும் விசேடசித்திகள் பெற்றுப் பல்கலைக் கழகத்துக்கு விஞ்ஞானபீடத்துக்குத் தெரிவாகிவிட்டான். வகுப்புக்கள் உயர உயர எல்லோரையும் போல் தானும் நடக்கவேண்டும் என்ற எண்ணம் அருள்நேசனுக்கும் ஏற்பட்டது. ஆகவே உடைகள் காலணிகள் ஆகியவற்றின் விடயத்தில் தன் குடும்ப நிலைப்பற்றி யோசிக்காமல் தாராளமாகவே செலவழிக்கலானான். விடுமுறைகளில் வீட்டுக்கு வரும் காலங்களில் தாய் அன்னம்மா அவனுக்கு இளைய மூன்று பிள்ளைகள் படித்துக் கொண்டிருப்பதையும் வீட்டுச் செலவுகள் அதிகரித்துக் கொண்டு போவதையும் பற்றிக் கூறி அவனுடைய செலவுகளைக் குறைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்

கொள்வாள். அப்போது தகப்பன் என்ன செய்யிறது அவனும் மேல் வகுப்புக்கு வந்திட்டான் மற்றப் பிள்ளைகளைப்போல இருக்க வேண்டாமா? என்று மகனுக்காக வாதாடுவார். அருள்நேசனுக்கும்தனது செலவுகளைக் குறைத்தும் பெற்றோருடைய வருமானத்திற்கு ஏற்றவாறு நடக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். ஆனால் ஏனைய மாணவர்கள் புதிய புதிய ஆடைகள் வாங்கும் போது தானும் அப்டியே வாங்க வேண்டும் என்ற ஆசைகள் அவனால கட்டுப்படுத்த முடியவில்லை.

அருள்நேசன் இப்போ பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கிறான். வசதியான குடும்பத்து மாணவர்களைப் போலவே புதுப்புது ஆடைகள், விலை உயர்ந்த காலணிகள் என அவனது பல்கலைக்கழக வாழ்க்கையும் போய்க் கொண்டிருக்க அவனுடன் படிக்கும் மாணவர்களும் அவனை ஒரு செல்வந்தன் வீட்டுப்பிள்ளையாகவே எண்ணிக் கொண்டனர் அருள் நேசனும் தனது தந்தைக்குக் கொழும்பில் கடைகள் சொந்தமாக இருப்பதாகக் கூறிக்கொண்டான். அவனுடைய ஊரைச் சேர்ந்தவர்கள் எவரும் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் படிக்காத படியால் அவன் கூறியதை எல்லோரும் நம்பி விட்டனர்.

அருள்நேசன் பல்கலைக்கழகத்தில் இரண்டு வருடப் படிப்பைப் பூர்த்தி செய்தபோது அவனுடன் படித்த மாணவர்கள் கண்டிக்கு மூன்று நாள் சுற்றுலா ஒன்றுக்குச் சென்றனர். சுற்றுலாவின் இரண்டாம் நாள் மாணவர்கள் ஒரு உணவு விடுதியொன்றிற்குச் சிற்றுண்டி சாப்பிடச் சென்றனர். அங்கே பரிமாறுபவரிடம் சிற்றுண்டிகளைச் கொண்டு வரும்படி கூறிவிட்டுக் காத்திருந்தபோது பரிமாறுபவர் ஒருவர் சுறுசுறுப்பாக மற்றவர்களுக்குச் சிற்றுண்டிகள் தேனீர் பரிமாறுவதை அருள்நேசன் அவதானித்தான். அவர் தற்செயலாக இவன் பக்கம் திரும்பியபோது அருள்நேசன் அதிர்ச்சியடைந்து போனான். அங்கே சிற்றுண்டி பரிமாறிக் கொண்டிருந்தவர் அவனுடைய தந்தை வேதநாயகம். நல்ல வேளையாக அவன் தன்னை அடையாளம் காணவில்லை என்று அறிந்ததும் தனக்குத் தலை வலிப்பதாகவும் சற்று நேரம் வெளியில் நிற்பதாகவும் கூறி

வெளியே வந்து விட்டான். நண்பர்கள் வந்தவுடன் அவர்களுடன் சுற்றுலாவில் கலந்து கொண்டாலும் அருள்நேசனுக்கு அவன் கண்டகாட்சி மனவேதனையைக் கொடுத்தது. வீட்டுச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் தான் தகப்பன் ஓர் உணவு விடுதியில் பரிமாறுபவராகச் சேர்ந்து பணிபுரிகிறார் முக்கியமாக இதற்கெல்லாம் தன்னுடைய ஆடம்பரச் செலவுகள் தானே காரணம் என்பதை நினைக்க நினைக்க அவனுக்குத் தன்மேலே மிகவும் வெறுப்பேற்பட்டது. அருள்நேசன் வாட்டமாக இருப்பதற்குக் காரணம் அவனுடைய சுகயீனம் என ஏனைய மாணவர்கள் எண்ணிக் கொண்டனர்.

அருள்நேசன் தந்தையை இந்நிலைக்குக் கொண்டுவந்து விட்டோமே என வருந்தினாலும் உடனடியாக எப்படி எல்லாச் செலவுகளையும் குறைப்பது என்பது விளங்கவில்லை புதிய புதிய ஆடைகள் ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதை நிறுத்திக் கொண்டான். அந்த முறை விடுதலைக்கு வீட்டுக்குப் போனபோது அருள்நேசன் முன்புபோல் உற்சாகம் இல்லாமல் இருந்ததை வீட்டில் இருந்தவர்கள் உணர்ந்தனர்

ஒருவாரம் சென்றபின்னர் தான் அருள்நேசன் தான்தந்தையைக் கண்டியில் உணவுவிடுதியில் கண்ட விடயத்தைத் தாயிடம் கூறினான். தாயும் என்ன செய்வது தம்பி நீயும் பல்கலைக்கழகத்தில் படிக்கிறாய் உன்னுடைய செலவோட மற்றப் பிள்ளைகளுடைய பள்ளிக் கூடச் செலவையெல்லாம் சமாளிக்கிறதெண்டால் கஸ்ரம்தானே அதுதான் அப்பா எங்கட கரீம்காக்காட்ட ஒரு வேலை தேடித்தரச் சொன்னார். கரீம் காக்காதான் அப்பாவை அந்தஹோட்டல்ல சேர்த்துவிட்டது. என்று சொல்லவும் அருள்நேசனுக்கு அழுகை வந்துவிட்டது. அப்பா தங்களுக்காக எவ்வளவு கஸ்ரங்களை அனுபவிக்கத் தான் ஆடம்பரச் செலவுகள் செய்வது எவ்வளவு துரோகமான செயல் எத்தனை மாணவர்கள் சிக்கனமாகச் செலவழித்துக் கல்வி கற்கிறார்கள்தான் இப்படியான போக்கைக் கைவிட்டுப் படித்து முடித்து ஒரு வேளையில் அமர்ந்து அப்பாவின் கஸ்ரத்தை நீக்கவேண்டு மென எண்ணிக் கொண்டான் அதன் பிறகு அவன் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தைக்

கண்டு பல்கலைக்கழக மாணவர்கள் வியந்து போனார்கள் சிலர் நேரடியாகவே அவனிடம் இதைப்பற்றிக் கேட்கவும் தொடங்கினார்கள், ஆரம்பத்தில் மற்றவர்களிடம் தனது மாற்றத்திற்கான காரணத்தைக் கூறத் தயங்கிய அருள்நேசன் பிறகு நண்பர்களிடம் தனது மாற்றத்திற்கான காரணத்தை மனம் திறந்து கூறினான்.

எங்களுடைய தாய் தகப்பன் எவ்வளவோ சிரமப்பட்டுப் படிப்பதற்காகப் பணம் அனுப்ப நாங்கள் இப்படி ஊதாரியாகச் செலவழிப்பது எவ்வளவு கொடுமை. வசதியுள்ள பெற்றோரின் பிள்ளைகளும் அப்படிச் செலவழித்தால் அது அவர்களுடைய பெற்றோரை எவ்வளவு பாதிக்கும் என்று கூறித்தான் தன்னுடைய தகப்பனைக் கண்டியில் விடுதியொன்றில் சிற்றுண்டி பரிமாறும்போது எதிர்பாராத விதமாகச் சந்தித்ததையும் கூறினான். தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற ஒருவர் எத்தகைய வேலையை வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் ஒரு பிள்ளை தன்னுடைய ஆடம்பரச் செலவுகளுக்காகப் பெற்றோரை இப்படியானதொரு வேலை செய்யக் காரணமாயிருப்பது எவ்வளவு தவறான செயல் என விளக்கினான். இதைக் கேட்டு ஏழைப் பெற்றோரின் மாணவர்மட்டுமின்றி வசதியான பெற்றோரின் பிள்ளைகளும் கண் கலங்கி விட்டனர், அத்தோடு தேவைக்கதிகமான செலவுகளைக் கட்டுப் படுத்தினால் எத்தனையோ ஏழை மாணவர்களின் கல்விக்கு உதவலாமேயென்பதையும் உணர்ந்து கொண்டனர். பல மாணவரின் மனமாற்றத்திற்கு உதவிபுரியத் தனக்குச் சந்தர்ப்பம் அளித்த கடவுளுக்கு அருள்நேசன் நன்றி கூறினான். சிக்கனமாக வாழ்ந்து படிப்பில் அதிக கவனம் செலுத்தி முதல் வகுப்பில் சித்தியடைந்து பட்டம் பெற்றுத் தொழிலிலமர்ந்து தனது குடும்பத்தை ஆதரவுடன் கவனித்து வருகிறான். தந்தையையும், தாயையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கிறான்.

# 2. புத்திசாலி நண்பன்

மரகதபுரி என்ற நாட்டைச் சித்திரசேனன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். மரகதபுரி ஓர் மலைகள் நிறைந்த நாடு அழகான மலைச்சிகரங்களும் அருவிகளும் ஆறுகளும் எங்கும் காணப்படும். எப்போது மழைபெய்வதால் தாவரங்கள் செழித்து வளரும். நாடு முழுக்கப் பழமரச் சோலைகளும் வண்ணமலர் செடிகளுமாக இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும்.

அந்த நாடு மிகவும் குளிர் நிறைந்தது. அங்கேயே மிகவும் குளிர் கூடிய சிகரம் ஒன்று உண்டு. அந்தச் சிகரத்துக்குச் செல்பவர்கள் மாலையாவதற்கு முன்னே அங்கேயிருந்து திரும்பி விடுவார்கள். இரவு நேரக் குளிரில் யாரும் அங்கே சிறுது நேரத்துக்கு மேல் இருக்க முடியாது. அரசன் சித்திரசேனனுக்கு ஒரு புதுமையான எண்ணம் ஒரு நாள் உண்டானது. ஒரு இரவு ஒரு மனிதன் அந்தக்குன்றில் தங்கினால் எப்படி இருக்கும் என அறிய அவன் விரும்பினான்.

யாராவது ஏழை ஒருவன் பணத்துக்காகத் தன் உயிரைப்பற்றிக் கவலைப் படாமல் தன் குடும்பம் வசதியாக வாழட்டும் என்ற எண்ணத்தில் சிகரத்தில் ஒரு இரவு முழுக்கத் தங்கியிருக்க வரக்கூடும் என எண்ணினான். அதன்படி மரகதக் குன்று என்ற அந்தச்சிகரத்தில் தன் நாட்டிலுள்ள எவராவது ஓர் இரவு முழுக்க ஆடை எதுவுமின்றி தங்கி உயிருடன் வந்தால் பெரிய தொகைப் பணமும் நிலபுலன்களும் வெகுமதியாக அளிக்கப்படும் என்று பறையறிவித்தான். குன்றிலே நிலவும் கொடிய குளிரைப் பற்றி நன்றாக அறிந்தபடியால் எவரும் அரசனுடைய வேண்டு கோளுக்கு இணங்கி வரவில்லை. அந்நாட்டிலே குமரன் என்ற ஏழைக்குடியானவன் ஒருவன் இருந்தான். அவன் வறுமை காரணமாகத் தன்னுடைய நிலபுலன்களை வசதியுள்ளவர்களிடம் அடைமானம் வைத்திருந்தான். அவனுடைய பெரிய குடும்பத்தைக் காப்பாற்றுவது அவனுக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

அரசனுடைய அறிவித்தலைக் கேட்ட போதுதான் அந்தச் சிகரத்தில் ஓர் இரவு தங்கிவந்தால் தனக்கும் பெரும் செல்வம்

கிடைக்குமேயென எண்ணினான். குளிரினால் இறந்தாலும் பரவாயில்லை. உயிரோடு வந்தால் கஸ்ரமெல்லாம் நீங்கி விடுமேயென எண்ணிய குமரன் அரசனிடம் சென்று தன் விருப்பத்தைக் கூறினான் ஓர் இரவு முழுக்க ஆடைகள் எதுவும் இன்றி நிர்வாணமாய் இருக்க வேண்டும் நெருப்பு மூட்டவோ குளிர் காய்வதற்கான எந்த முயற்சியோ செய்யக் கூடாது உன்னால் அப்படியிருக்கச் சம்மதமா என்று கேட்டு அவன் சம்மதிக்கவே

அரசன் வீரர்கள் இருவரை அழைத்து அவர்களுக்குக் குளிரிலிருந்து பாதுகாப்பளிக்கக் கூடிய கம்பளியாடைகளையும், கம்பளிக்போர்வைகளையும் கொடுத்து அன்றிரவு முழுக்கக் குமரன் சிகரத்தில் ஆடையெதுவுமின்றியிருப்பதைக் கண்காணிக்குமாறு அனுப்பினான்.

மூவரும் கிளம்பிச் சென்று மலைச்சிகரத்தையடைந்த போது மாலையாகிவிட்டது. வீரர்கள் கம்பளியாடைகளை உடுத்திக் கொண்டு போர்வைகளாலும் போர்த்துக் கொண்டனர் குமரன் தான் உடுத்தியிருந்த ஆடைகளையும் களைந்து விட்டு வீரர்கள் தன்னைப் பார்க்கக்கூடிய வகையில் ஓரிடத்தில் நின்று கொண்டான் நேரம் போகப் போகப் குளிரும் அதிகரித்துக் கொண்டே போனது.

கம்பளியாடைகளுடன் இருந்த வீரர்களே குளிரைத் தாங்க முடியாமல் நடுங்கிக் கொண்டிருந்தனர் ஆடைகள் எதுவுமின்றி நிர்வாணமாக நின்ற குமரன் நிற்பதும் இருப்பதும் படுப்பதுமாகத் தவித்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு மைல் தூரத்திலே ஒரு வெளிச்சம் ஒன்று அவனுக்குத் தெரிந்தது மந்தை மேய்ப்பவர்கள் குளிர் காய்வதற்காக உண்டாக்கிய நெருப்பு அது என்பது அவனுக்குத்தெரியும் தானும் அவ்வாறு நெருப்பை உருவாக்கினால் சுகமாகக் குளிர் காயலாமே என எண்ணினான் அவனிடம் நெருப்பு உண்டாக்கக் கூடிய வசதிகள் எதுவுமில்லை குளிர் காய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டால் தன்னுடைய முயற்சியில் வெற்றி பெற்றாலும் வெகுமதிகிடைக்காது; என்பதையும் குமரன் எண்ணிக் கொண்டான்.

விடிய விடிய அந்தக் கொடிய குளிரைத் தாங்கிக் கொண்டு குமரன் உயிர் பிழைத்து விட்டான். விடிந்தவுடன் விழித்த அரசனுடைய வீரர்கள் குமரன் உயிர் பிழைத்திருப்பதைப்பார்த்து ஆச்சரியப் பட்டனர் மூவரும் குன்றிலிருந்து இறங்கி அரண்மனைக்குச் சென்றார்கள் அவர்கள் அரசன் முன்னிலையில் சென்ற போது அரசனால் குமரன் ஓரிரவு முழுக்க அந்தச் சிகரத்தில் நிர்வாணமாய் இருந்தான் என்பதை நம்பமுடியவில்லை அரசன் சந்தேகத்தோடு வீரர்களிடம் பல கேள்விகள் கேட்டான். அவர்களும் குமரன் இரவு முழுக்க ஆடையின்றிக் குளிரிலிருந்ததை உறுதிப்படுத்தவே அரசன் குமரனிடம் நீ நெருப்பு உண்டாக்கவில்லையா? நெருப்பைப்பார்க்கவில்லையா? என்று கேட்டான்.

குமரனும் தான் நெருப்பு உண்டாக்கவில்லையென்றும் ஒரு மைல் தூரத்தில் மந்தை மேய்ப்பவர்கள் குளிர்காய உண்டாக்கிய நெருப்பைப் பார்த்ததாகக் கூறினான் உடனே அரசன் நீ நிபந்தனையை மீறிவிட்டாய் உனக்கு வெகுமதியைத் தரமுடியாது என்று கூறவிட்டான்.

குமரன் எவ்வளவோ வாதாடிப் பார்த்தும் அரசனின் முடிவை மாற்ற அவனால் முடியவில்லை ஏமாற்றத்துடன் குமரன் வீடு சென்றுவிட்டான் ஓர் இரவு முழுக்கத் தான் அனுபவித்த வேதனையையும் தான் ஏமாற்றப்பட்டு விட்டதையும் குமரன் தன் நண்பன் ரஹீமிடம் கூறினான் அதற்கு ரஹீம் அமைச்சர்களிடம் நடந்ததைக் கூறினால் அமைச்சர்கள் அரசனின் மனதை மாற்றக் கூடும் என்று கூறினான்.

ரஹீம் கூறியபடி குமரன் அமைச்சர்களைச் சந்தித்து நடந்தவற்றைக் கூறினான். பெயரளவுக்குத்தான் அமைச்சர்களாயிருந்த அந்நாட்டு அமைச்சர்கள் அரசனுடைய கருத்துக்கு எதிராக ஒருபோதும் கருத்துச் சொல்லமாட்டார்கள் அவர்களும் அரசன் சொல்வதே சரியென்று கூறினர்.

நடந்தவற்றையறிந்த குமரனின் நண்பன் ரஹீம் அரசனுக்கும் அவனுடைய அமைச்சர்களுக்கும் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்யுமாறு குமரனிடம் கூறினான் குமரனும் தனது வீட்டில் ஒரு ஆடம்பரமான

மண்டபம் அமைத்துக் குறிப்பிட்ட ஒரு நாளில் அரசனையும் அமைச்சர்களையும் விருந்துக்கு அழைத்திருந்தான். மன்னன் ஆச்சரியப்பட்டாலும் மனம் நொந்து போயிருக்கும் குமரனின் வேண்டுகோளை தட்டமுடியாமல் விருந்துக்குச் சென்றான்.

குறிப்பிட்ட நாளன்று அரசனும் அமைச்சர்களும் குமரனின் வீட்டிற்குச் சென்றனர். அங்கே குமரன் அவர்களை அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் அவர்களை அமரச் செய்து குளிர்பானங்கள் வழங்கி உபசரித்தான் குமரனின் நண்பன் ரஹீமும் வந்தவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தான்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. சாப்பாட்டு நேரமும் நெருங்கிவிட்டது. எல்லோருக்கும் பசியெடுக்கத் தொடங்கிவிட்டது சாப்பாட்டு நேரம் கடந்து கொண்டு போக அமைச்சர்கள் குமரனிடம் நேரம் போய்க் கொண்டியிருப்பதைக் குறிப்பிட்டு அவனும் இன்னும் சாப்பாடு முடியவில்லை இப்போ முடிந்து விடும் என்று கடத்திக் கொண்டே போகிறான். சமையலறையிலிருந்த சுவையான உணவுப் பண்டங்களின் வாசனை வரத்தொடங்குகிறது. சாப்பாடோ இன்னும் முடியவில்லை யென்று குமரன் கூறிக் கொண்டிருக்கிறான்

இதையறிந்த அரசன் சாப்பாட்டு வாசனை மூக்கைத்துளைக்கிறது நீயோ சாப்பாடு முடியவில்லை என்று கூறுகிறாய். உண்மையில் சாப்பாடு முடியவில்லையா? இல்லை எங்களைப் பழிவாங்குகின்றாயா? என்று கேட்கவும்

மகா ராஜா சாப்பாட்டு வாசனையை உணருகிறீர்களா என்று கேட்கவும் ஆஹா எவ்வளவு சுவையான வாசனையை உணருகின்றேன் என்று கூற அமைச்சர்களும் 'இப்படியான ஒரு அற்புதமான வாசனையை நாங்கள் இதுவரை அனுபவித்ததில்லை சிக்கிரமாக உணவுப் பண்டங்களைக் கொண்டு வா' என்று கூற


'அமைச்சர்களே வாசனையை உணர்ந்த உங்கள் பசியும் தீர்ந்திருக்க வேண்டுமே' யென்று கூற

என்ன வாசனையை உணர்ந்தால் பசிதீர்ந்து விடுமா? என்று அமைச்சர் ஒருவர் கேட்க.

குமரனின் நண்பன் ரஹீம்

அமைச்சரே ஒரு மைல் தூரத்தில் தெரிந்த நெருப்பைப் பார்த்து ஒரு மனிதன் குளிர் காய முடியுமானால் உங்களுக்கு மிக அருகில் இருக்கும் உணவுப் பண்டங்களின் வாசனை உங்கள் பசியைத் தீர்க்க முடியாதா? என்று கேட்கவும் மன்னனும் அமைச்சர்களும் தங்கள் தவறுகளை உணர்ந்து குமரனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

மன்னனும் தான் வாக்குறுதியளித்த வெகுமதிகளைக் குமரனுக்கு வழங்க உறுதியளித்தான். உடனடியாக அரசனுக்கும் அமைச்சர்களுக்கும் சுவையான உணவு வழங்கப்பட்டது. மன்னன் வழங்கிய வெகுமதிகளை நண்பன் ரஹீமுக்கும் கொடுத்து குமரன் மகிழ்வோடு வாழ்ந்தான்.



# 3. உண்மையானசேவை

மணற்காடு என்ற கிராமத்தைச் சேர்ந்த மூர்த்தி ஒரு தனியாள், பெற்றோர்கள் காலமான பின் தன் சகோதரிகளுக்கெல்லாம் மூர்த்தியே செலவழித்துத் திருமணம் செய்து கொடுத்தான் மூத்த சகோதரிக்கும் மூன்று இளைய சகோதரிகளுக்கும் திருமணம் செய்து முடிய மூர்த்திக்கும் நாற்பத்தியைந்து வயதைத் தாண்டிவிட்டது. அதன் பிறகு மூர்த்தி தனது திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

மூத்த சகோதரி சாந்தாவின் திருமணம் முடிந்த மூன்று வருடங்களிலேயே சாந்தாவின் கணவன் விபத்தொன்றில் காலமாகிவிட மூர்த்தி அவளுக்கும் அவளுடைய மூன்று பிள்ளைகளுக்கும் துணையாக அவளுடனே தங்கிவிட்டான்.

மணல் காட்டில்வேறு பல ஊர்களைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக வந்து தங்கியிருந்தனர். மூர்த்தி இரக்க சுபாவமுள்ளவன் வயதானவர்கள் இயலாதவர்கள் யாராயிருந்தாலும் தன்னால் இயன்ற உதவி செய்து வந்தான். அகதி மக்களுக்கு மட்டுமன்றி அவ்வூரைச் சேர்ந்த மக்களுக்கும் அவன் பல வேலைகளில் எப்போதும் உதவுவான் வீடு அமைத்தல், வேலியடைத்தல் போன்ற உதவிகளோடு வயோதிபரை நோயளிகளை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லுதல் போன்ற உதவிகளையும் செய்து வந்தான். வீடுகளில் உதவியில்லாதவர்களுக்குக் கடைத் தெருவுக்குச் சென்று பொருட்கள் வாங்கிக் கொடுத்தல் போன்ற வேலைகளையும் செய்து கொடுத்தான்.

இதனால் அந்த ஊர் மக்களும் அகதி மக்களும் அவனிடம் மிகுந்த அன்பு பாராட்டினார். நேர்மையும், ஒழுக்க முமுள்ள மூர்த்தியை அவ்வூரிலுள்ள பெரியவர்கள் பலர் வெறுத்தனர். இவர்கள் ஊருக்குச் சேவை செய்பவர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டு நேர்மையற்ற வழிகளிலே பணம் சம்பாதிப்பவர்களாக இருந்தார்கள்.

அரசாங்க வேலைகளைப் ஒப்பந்தம் எடுத்துச் செய்தாலும் சிரமதான வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்தாலும் முறைகேடான

வழிகளில் பணம் பெறுவதைப் பலர் வழக்கமாகக் கொண்டனர் மூர்த்தியின் மேல் மக்கள் வைத்துள்ள அன்பும் ஆதரவும் மூர்த்தியின் நேர்மையான பேச்சும் செயலும் மூர்த்தி தங்களின் அநீதியை அம்பலப்படுத்திவிடுவான் என்று அவர்களுக்கு ஏற்படுத்தியது இதனால் மூர்த்தியைத் தங்கள் ஊரிலுள்ள கூட்டுறவுச் சங்கம் கிராமோதய சபை போன்ற எந்த விதமான அமைப்புக்களிலும் நிர்வாகத்தில் சேர்க்காமல் விட்டனர்

அந்தக் கிராமத்தில் மாதம் ஓரிருமுறை வீதி திருத்துதல் கோயில் வளவு பாடசாலை வளவு வேலியடைத்தல் போன்ற வேலைகள் சிரமதான முறையில் இடம் பெறும். மூர்த்தி கூடுதலாக வயோதிபர் நோயாளிகளுக்கு ஏதாவதொரு வகையில் உதவிக் கொண்டிருப்பான். இதனால் அவன் சிரமதான வேலைகளில் பங்கெடுக்க முடியவில்லை இதை ஒரு காரணமாகக் கொண்ட மூர்த்தியில் பொறாமை கொண்டவர்கள் மூர்த்தியை ஒதுக்கி வைக்கத்திட்டம் போட்டனர்.

மூர்த்திக்கு அரச உதவி எதுவும் கிடைக்காமலும் தடுத்தனர் எந்த அமைப்புக் கூட்டங்களுக்கும் அவனை அழைக்காமல் விட்டனர். மூர்த்தி எதற்கும் கவலைப் படாமல் தான் பிறருக்குச் செய்யும் சேவையைத் தொடர்ந்து செய்து வந்தான்.

ஏனைய வருடங்களைவிட அந்த வருடம் எதிர்பாராத விதமாகத் தொடர்ந்து அடைமழை பெய்தது. குளங்கள் எல்லாம் நிரம்பி வழியத் தொடங்கி விட்டன. மூர்த்தியின் மூத்த சகோதரியின் கடைசி மகளுக்குக் காய்ச்சல் வந்து கடுமையாக்கி உள்ளூர் வைத்தியசாலையில் சிகிச்சை பலனளிக்காமல் போகவே தாய் சாந்தா குடும்பத்தோடு கணவனின் ஊரான கொழும்புக்குக் கூட்டிச் சென்று மகளுக்குச் சிகிச்சையளிக்கத் தீர்மானித்ததால் மூர்த்தியும் உடனே செல்ல வேண்டியதாயிற்று மூர்த்தி சாந்தாவின் குடும்பத்தைக் கொழும்பில் கொண்டு போய் சேர்த்துக் குழந்தைக்கும் ஓரளவு சுகம் வரவிட்டுத்தனியே ஊருக்குத் திரும்புகிறான், அவன் ஊருக்கு வந்தபோது பெரு மழையின் காரணமாகக் குளங்களெல்லாம் உடைப் பெடுத்து ஊருக்குள்ளும் வெள்ளம் புகுந்து விட்டது. மூர்த்தி ஊரையடைந்தபோது

ஊரிலுள்ளவர்களெல்லாம் தமது உடமைகளுடன் வெளியேறி வேறுபாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட்டனர்.

அந்த ஊரிலே அகதிகளாக வந்தவர்களில் எழுபத்தியைந்து வயதைத் தாண்டிய ஒரு வயோதிபரும் அவர் மனைவியும் இருந்தனர் அவர்கள் இருவருக்கும் வேண்டிய உதவிகளை இதுவரை காலமும் மூர்த்தியே செய்து வந்தான் இப்போது சனங்கள் எல்லாம் ஊரைவிட்டு வெளியேறிய நிலையில் அந்த வயோதிபத் தம்பதிகளுக்கு என்ன நடந்தது என்றறிய மூர்த்தி அவர்களுடைய குடிசையை நோக்கி ஓடினான்

அவர்களுடைய குடிசை ஓரளவு மேட்டில் இருந்தபடியால் அவர்களுடைய குடிசைக்குள் வெள்ளம் புகவில்லை உள்ளே சென்ற மூர்த்தி குளிரிலே நடுங்கிக் கொண்டிருந்த இருவரையும் கண்டு மிகவும் வேதனைப் பட்டான் ஊரிலிருந்த ஒருவருக்குக் கூட இவர்களைக் கூட்டிச் செல்ல மனம் வரவில்லையே என்பதையறிந்து ஆச்சரியப்பட்டான்.

தாமதிக்காது கிடைத்த கம்பு தடிகளைக் கொண்டு ஒரு பரண் அமைத்து அவர்கள் இருவரையும் அதில் ஏற்றிவிட்டு கிடைத்த விறகுகளைக் கொண்டு நெருப்பு மூட்டி அவர்களைக் குளிர்காய வைத்தான் இருந்த மாவில் ரொட்டி சுட்டும் தேனீர் வைத்து கொடுத்து அவர்களுடைய பசியைப் போக்கினான் விடியும் போது வெள்ளமும் வடிந்து விட்டது.

ஊரை விட்டுப் போனவர்கள் ஊருக்குத் திரும்ப இரண்டு நாட்களாகி விட்டது. இங்கே அவர்கள் கைவிட்டுப்போன இரண்டு சீவன்களை மூர்த்தி காப்பாற்றிப் பராமரித்த விடயம் மெல்ல மெல்ல எங்கும் பரவி விட்டது பெயருக்கும் புகழுக்குமாகச் செயல்பட்டு மூர்த்தியை ஒதுக்கிய பெரியவர்களின் கபடத்தனம் அம்பலமாகி மூர்த்தியின் தியாகத்தை எல்லோரும் உணர்ந்து கொண்டனர்.

# 4. மூத்தோர் அறிவுரை

வரதன் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பையன் வவுனியாவில் ஆலங்குளம் என்ற விவசாயக் கிராமமொன்றில் தன் பெற்றோருடன் வசித்து வந்தான். அவனுக்கு ஒரு அண்ணனும் ஒரு அக்காவும் உண்டு. அத்தோடு அவனுக்கு இரண்டு வயது இளைய தம்பியும் மூன்று வயதில் ஒரு தங்கையும் உண்டு.

வரதன் அவனுடைய அண்ணன் பாலா, அக்கா சாந்தா, தம்பி குமார் எல்லோரும் ஆலங்குளத்திலுள்ள ஆரம்பப்பாடசாலையில் படித்து வருகிறார்கள் கடைசித்தங்கை சுமதிக்கு ஐந்து வயது நிரம்பியதும் அவளையும் பாடசாலையில் சேர்த்துப் பாடசாலை செல்லத் துவங்க வரதனின் அண்ணன் பாலா ஐந்தாம் வகுப்பில் சித்தியடைந்து விட்டதால் வவுனியாவிலுள்ள உயர்தரப் பாடசாலையில் சேர்ந்து அங்கு சென்று படித்து வந்தான். அடுத்த வருடமே அக்கா சாந்தாவும் உள்ளூர் பாடசாலையில் ஐந்தாம் ஆண்டு சித்தியடைந்து விட்டதால் வவுனியாவிலுள்ள பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சேர்ந்து அண்ணன் பாலாவுடன் வவுனியாவுக்குப் பாடசாலைக்குப் போகத் தொடங்கி விட்டாள்

இப்போ வரதன் தம்பி குமாருடனும் தங்கை சுமதியுடன் உள்ளூர்ப்பாடசாலையில் படித்து வருகிறான். இப்போது வரதனுடைய தகப்பன் சுப்பையாவுக்குப் பிள்ளைகளுடைய பாடசாலைச் செலவைச் சமாளிப்பது சிரமமாக இருக்கிறது. விவாசயக் காணிகளும் சுப்பையாவுக்குக் குறைவு. இரண்டொரு பசுமாடுகள் வைத்திருக்கிறான் இவற்றில் கிடைக்கும் வருமானத்தைக கொண்டே குடும்பச் செலவையும் பாடசாலைச் செலவையும் சமாளித்து வருகிறான்.

அன்று வரதன் படிக்கும் பாடசாலைக்கு வந்த தேசிய வங்கி ஒன்றின் பிரதி நிதியொருவர் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு வங்கியில் சேமிப்புக் கணக்குத் தொடங்குவதனால் கிடைக்கக்கூடிய நன்மைகள் பற்றி விளக்கினார். அடுத்தவாரம் புதன் கிழமை தான் மீண்டும் பாடசாலைக்கு வரும்போது சேமிப்புக் கணக்கைத் தொடங்க விரும்பும்

மாணவர்களுக்குத்தான் தொடங்கி வைப்பதாகவும் கூறினார். கணக்கை ஆரம்பிப்பதற்குரிய தொகையையும் கொண்டு வருமாறு கூறினார்.

அன்று பாடசாலையை விட்டு வீடுவந்த வரதன் அவனுடைய மாமா மூர்த்தி கொழும்பிலிருந்து வந்திருப்பதையறிந்து மகிழ்ச்சியடைந்தான். மூர்த்தி கொழும்பில் கடையொன்றில் கணக்கு எழுதும் வேலையிலிருக்கிறார். அவர் நீண்ட காலாமாகக் கொழும்பில் இருப்பதால் பல தரப்பு மக்களுடனும் பழகி நல்ல அனுபவம் உடையவர்

வவுனியாவுக்கு அவர் வரும்போது சுப்பையாவுடைய குடும்பத்தினருக்கு உடுப்புக்களுடன் வேறு பலவகையான பொருட்களும் வாங்கிவருவார். தீன் பண்டங்கள் மற்றும் விளையாட்டுச் சாமான்களும் கொண்டு வருவார். மாமன் மூர்த்தி படிப்பைப் பற்றிக் கேட்டவற்றிற்கு மறு மொழி சொல்லிக் கொண்டிருந்த வரதன் பிரதிநிதி கூறியவற்றைக் கூறினான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த வரதனுடைய மாமா மூர்த்தியும் வங்கியில் சேமிப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி விரிவாகக் கூறி எல்லாப் பிள்ளைகள் பெயரிலேயும் சேமிப்புக் கணக்குகளைத் தொடங்கச் சொல்லிச் சுப்பையாவிடம் ஆயிரம் ரூபாய்பணமும்கொடுத்தார். சேமிப்புக் கணக்குத் தொடங்கியதன் பின் அவ்வப் போது விசேட தினங்களில் கிடைக்கும் பணத்தையெல்லாம் சேர்த்து ஒரு குறிப்பிட்ட தொகை சேர்ந்ததும் வங்கியில் போட்டு வந்தான் மற்றவர்கள் கணக்கு ஆரம்பித்த புதிதில் இரண்டொரு முறை பணம் போட்டதோடு நிறுத்திவிட்டார்கள் உள்ளூர் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புச்சித்தியடைந்தவுடன் வரதனும் வவுனியாவிலுள்ள அண்ணன் பாலா படிக்கும் பாடசாலையில் சேர்ந்து விட்டான் படிப்பில் கெட்டிக்காரனான வரதன் க.பொ.த சாதாரண தரத்தில் திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்து க.பொ.த உயர்தரத்திற்கு வந்து விட்டான் வரதனுடைய அண்ணன் பாலு க.பொ.த உயர்தரப் சித்தியடைந்தாலும் பல்கலைக்கழக அனுமதிக்குரிய பெறு பேறுகள் போதாமையால் ஓர் பாடசாலையில் உதவியாசிரியராக நியமனம் பெற்றுக் கடமைபுரிகிறான். அக்கா சாந்தா க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்து இரண்டு வருடங்களில் தபால் அலுவலக ஊழியர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டு போய் விட்டார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியான போது வரதன் மூன்று விசேட சித்திகளுடன் பொறியியல் பீடத்திற்கு தெரிவாகியிருப்பதையறிந்து எல்லோருக்கும் மிகவும் மகிழ்ச்சி. சுப்பையாவுக்கு எப்படி மகனைப் பல்கலைக் கழகம் அனுப்பிப் படிப்பிக்கவைப்பதென்ற கவலை.

ஒரு நாள் வீட்டில் சுப்பையா மற்றவர்களுடன் வரதனுடைய பல்கலைக்கழகப் படிப்புக்குரிய செலவுகள் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது அங்கே வந்த வரதன் 'அப்பா நீங்கள் மூர்த்தி மாமா தருகிற பணத்தையெல்லாம் நான் வங்கியில் போட்டு வைத்திருக்கிறேன். இப்போ போட்ட பணத்தோடு வட்டியும் சேர்ந்து ஒரு இலட்சத்து முப்பதாயிரம் வந்திருக்கும். வங்கி முகாமையாளர் அன்றைக்கு என்னிடம் கூறினார். அவர் நான் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியிருப்பதைப் பாராட்டி விட்டுப் படிப்புக்கு மேலும் பண உதவி தேவைப்படும்போது வங்கிமூலம் கடனுதவி செய்வதாகவும் கூறினார். என்று கூறவும் சுப்பையாவுக்கும் சந்தோசம் வரதனுடைய பல்கலைக்கழகப் பெறு பேறுகளையும் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகியிருப்பதையும் அறிந்த பல்வேறு அமைப்புக்கள் அவனுடைய பல்கலைக்கழகச் செலவுகளுக்கு உபகாரச் சம்பள வசதியளிக்க முன் வந்ததால் வரதனுடைய சேமிப்பு அவனுடைய குடும்பச் செலவுகளுக்கும் அவனுடைய பிற்காலத் தேவைகளுக்குமாக வங்கியிலே விடப்பட்டது.

மூத்த வங்கியாளர் ஒருவரின் அறிவுரையைக் கேட்டு நடந்த வரதன் தன் கல்விக்குத் தேவையான பணத்தைத் தானே தேடிக் கொண்டான்.

# 05. சாமிவந்த பூசாரி சாமிக்கண்ணு

சாமிக்கண்ணு அந்த ஊரிலே பிரசித்தி பெற்ற பூசாரி. குறிசொல்லுதல், பில்லி சூனியம் எடுத்தல் மை பார்த்தல், பேயோட்டுதல் எனப் பல வேலைகளைச் செய்து வந்தான். ஆத்தியடி யென்ற அந்த ஊரிலுள்ள மூட நம்பிக்கையுள்ள பலர் அவனிடம் சென்ற பணத்தைக் கொடுத்து ஏமாந்தனர்.

ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் சாமிக்கண்ணு ஆடிக்கொண்டு குறிசொல்லுவான். அவன் ஒருவருக்கும் புரியாத ஏதோ ஒரு இராகத்தில் பாடிக்கொண்டு குறிகேட்க வந்திருப்பவரிடம் கேட்கும் கேள்விகள் சரியாக எவருக்கும் புரியாது. அவற்றை விளக்கிச் சொல்லக் கூட ஒருவர் இருப்பார் சாமிக்கண்ணு கூறவதற்கு ஓிருமுறைக்குமேல் விளக்கம் கேட்டால் அல்லது மறுத்தால் கையிலுள்ள கயிற்றினால் செய்த சவுக்கால் அடிப்பான் அதற்குப் பயந்து எவரும் மறுத்துச் சொல்வதில்லை.

வெள்ளிக் கிழமைகளில் மாலை ஆறுமணிக்குப் பிறகு பலர் சாமிக் கண்ணுவின் வீட்டுக்கு வருவார்கள். குடும்பத்தில் வரும் பிரச்சனையைத்தீரக்க, காணாமற் போன பொருட்களைக் கண்டுபிடித்துக் கொடுக்க தொழிலில் ஏற்படும் நட்டத்தைத் தடுக்க திருமணத்தில் ஏற்படும் தடையைத்தீர்க்க என்று பல பிரச்சனைகளோடு வருவார்கள்.

ஒன்றிரெண்டு விடயங்களில் சாமிக்கண்ணு கூறிய விடயங்கள் சரியாக அமைந்து விடுவதும் உண்டு இதனால் பலரும் அவனிடம் நம்பிக்கை கொண்டு, அவனிடம் வரத் தொடங்கினர். இதனால் அவனுடைய வருமானமும் பெருகியது கூடுதலாகத் தங்கள் பொருளைத் தொலைத்தவர்கள் களவு கொடுத்தவர்களே அவனிடம் குறிகேட்க வந்து போயினர். தொலைந்து போன பொருள் தானாகக் கண்டு பிடிக்கப்பட்டாலும் சாமிக்கண்ணுவின் தெய்வ சக்தியொன்று என்று எல்லோரும் பேசத் தொடங்கிவிட்டனர். சாமிக்கண்ணு களவெடுத்தவனைத் தனது சக்தியால் முடங்கப் பண்ணிவிடுவான், என்ற பயத்தில் பலர் களவெடுத்தவர்களுடைய வீட்டில் எடுத்த பொருளைக் கொண்டு வந்து போட்டு விடுவது முண்டு இப்படிச்

சாமிக்கண்ணுவைப் பற்றிய பயத்தைப் பரப்பச் சிலர் சாமிக்கண்ணுவுக்காகச் செயல்பட்டு வந்தனர்.

சிறிது காலம் செல்ல அந்த ஊரில் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுப் பிள்ளைகள் மூட நம்பிக்கைகளை நம்ப மறுத்தனர். அறிவியலால் ஏற்பட்ட வளர்ச்சியும் வானொலி மற்றும் விஞ்ஞான சாதனங்களின் பாவனையும் இளைஞர்கள் மத்தியிலே மூட நம்பிக்கையைக் கேலி செய்யும் போக்கை உருவாக்கியது. இவர்களை இளைஞர்கள் தொடர்ந்து கேலி செய்ததால் பலர் சாமிக் கண்ணுவிடம் குறிகேட்கப்போவதை விட்டு விட்டனர் சாமிக்கண்ணுவிடம் குறிகேட்க வருபவர்களின் தொகை குறையத் தொடங்க சாமிக்கண்ணுவின் வருமானமும் குறைந்து அவனுடைய நாளாந்த சீவியமும் சிரமமாகி விட்டது.

இதனால் ஆத்திரமடைந்த சாமிக்கண்ணு புதிய உபாய மொன்றைக் கையாண்டான். இயற்கை மரணங்கள் நிகழ்ந்தாலும் ஊரில் தொற்று நோய்கள் பரவினாலும் வெள்ளம், புயல் போன்ற தொற்று நோய்கள் பரவினாலும் எல்லாம் சாமிக்குற்றத்தால் வந்த துன்பங்கள் என்று கூறத் தொடங்கி விட்டான். சனங்கள் சாமியை மறந்து சாமிக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்யாததால் சாமி கோபங் கொண்டு இப்படியான துன்பங்களைச் சனங்களுக்குக் கொடுக்கிறது என்று அவன் கூற அவனுடைய உதவியாளர்கள் அவன் சொல்வது உண்மையென்று ஊசெல்லாம் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டார்கள் இதனால் பயங் கொண்ட மக்கள் பலர் மீண்டும் சாமிக்கண்ணுவிடம் தங்கள் பிரச்சனைகளுக்காகப் போகத் தொடங்கினர்.

இந்த மூடக் கொள்கைகளை முற்றாக ஒழிக்க வேண்டு மென்று உறுதியெடுத்துக் கொண்ட அந்த ஊர் இளைஞர் சிலர் திட்டமிட்டுச் செயல்பட்டனர். ஒரு வெள்ளிக்கிழமை ஆறு மணிக்கு சாமிக்கண்ணுவின் வீட்டுக்குக் குறிகேட்க மக்கள் வரத் தொடங்கினர். இரவு எட்டு மணியிருக்கும் சாமிக்கண்ணுவுக்கு சாமி வந்து பாடியாடிக் கொண்டிருக்கிறான். ஒரு கையில் வேப்பிலைக் கொத்தும் மறுகையில் சவுக்குமாகப் புரியாத பாசையில் அவன் கேட்கும் கேள்விகளை

குறிகேட்பவருக்கு உதவியாளர் ஒருவர் விளக்கிக் கொண்டிருந்தார். சாமிக் கண்ணுவின் பாட்டுச் சத்தமும் உயர்ந்து கொண்டு போகிறது. உடுக்குச் சத்தமும் அவனுடைய ஆட்டமும் பார்ப்பவர்களுக்கு பயங்கரத்தைக் கொடுக்கிறது. அப்போது அங்கே ஓடி வந்த இளைஞன் ஒருவன் பதட்டத்துடன் "சாமிக் கண்ணு சாமிக்கண்ணு" என்று கூப்பிடச் சாமிக்கண்ணுவின் உதவியாளர் அவர் சாமி வந்து ஆடிக்கொண்டு நிற்கிறார். நீ கூப்பிட்டால் அவருக்குக் கேட்காது. சாமி போகவிட்டு வா என்று சொல்ல வந்து இளைஞன் ஐயோ அவரிட வீட்டில் கொள்ளை. கொள்ளைக்காரங்க வந்து வீட்டில இருந்த ஆக்களையெல்லாம் கட்டிப்போட்டு இருந்த பொருளையெல்லாம் கொள்ளையடிச்சுக் கொண்டு போயிற்றாங்க எண்டு சொல்ல ஐயையோ நான் பாடுபட்டுச் சம்பாரிச்சகாசு நகையெல்லாம் போச்சே எண்டு சொல்லிக் கொண்டே கையிலிருந்த வேப்பிலை சவுக்கையெல்லாம் வீசியெறிந்து விட்டுச்சாமிக் கண்ணு தெருவில் இறங்கி ஓடுகிறான். அன்றோடு சாமிக்கண்ணுவின் ஏமாற்று வேலையெல்லாம் ஊரெல்லாம் பரவி விட்டது. ஊர் மக்களும் மூடக் கொள்கையை நம்புவதைவிட்டு விட்டனர். இளைஞர்களின் உபாயத்தால் ஊர் மக்கள் விழிப்படைந்து விட்டனர்.



# 06. வழிகாட்டிகள்

குமார் ஒரு செல்வந்தரின் மகன் அவனுடைய தந்தைக்கு ஏராளமான நிலபுலன்கள் உண்டு குமார் குடும்பத்தில் ஒரே ஆண் பிள்ளை மூத்த இரு சகோதரிகள் அவனுக்கு உண்டு ஒரே ஆண்பிள்ளையாதலால் குமார் செல்லப் பிள்ளையாகவே வளர்ந்து விட்டான் அவன் விரும்பியதையெல்லாம் வாங்கிக் கொடுப்பான். விளையாட்டுச் சாமான் வந்து விட்டால் அது குமார் வீட்டுக்கு வந்து விடும்.

புதுப்புதுவிதமான ஆடைகள் காலணிகள் அவனுக்கு ஏராளம் உண்டு கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்ததால் அவன் செல்லப் பிள்ளையாகவும் பிடிவாதக் குணமுள்ளவனாகவும் வளர்ந்து விட்டான். கல்வியில் பெரிதும் அக்கறை காட்டவில்லை தனது பொருட்களிலும் கவனமில்லை செலவு செய்வதிலும் ஊதாரியாக இருந்தான்.

குமாருடைய பாடசாலையில் அவன் படித்த வகுப்பில் முருகன் என்றொரு ஏழை மாணவன் படித்து வந்தான். கூலித் தொழிலாளியொருவனின் மகனான முருகன் மிகவும் வறுமையான குடும்பச் சூழலில் வாழ்ந்து வந்தான். படிப்பில் மிகவும் கெட்டிக்காரனான முருகன் விளையாட்டிலும் திறமைசாலியாக இருந்தான். அந்த வருடம் பாடசாலையில் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிக் முருகன் பல பரிசில்களைப் பெற்றான். வட்டாரப் போட்டிகளில் ஓட்டப்போட்டி நீன உயரப் பாய்ச்சல்களில் முதலிடம் பெற்ற முருகனுக்கு வட்டாரப் போட்டிகளில் பங்கு பற்றும் வாய்ப்புக் கிடைத்தது. வட்டாரப் போட்டிகளில் பங்கு பற்றும் வீரர்களுக்குச் பயிற்சியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் வட்டாரப் போட்டிகளுக்குச் செல்லும் வீரர்கள் எல்லோரும் காலணி அணிய வேண்டும். அதனால் பயிற்சியின் போதும் காலணியோடு வரவேண்டும் என்றும் கூறிவிட்டார். காலணிக்குக் காசு கொடுத்து வாங்க வசதியில்லாத முருகன் வட்டாரப் போட்டியில் பங்கு பற்றும் எண்ணத்தை விட்டுவிட்டான். ஒருநாள் குமார் பாடசாலை செல்லும் வழியில் முருகன் தங்கள் தோட்டத்தில் வேலை

செய்துகொண்டிருப்பதை கண்டு பாடசாலைக்கு வராததைப் பற்றி விசாரிக்க முருகன் காலணிவிடயத்தைக் கூறித் தங்கள் வீட்டு வறுமையின் காரணமாகத்தான் படிப்பை நிறுத்தி விட்டதாகக் கூறினான்.

முருகனைப் பற்றிய சிந்தனையுடனே சென்ற குமார் தான் இவ்வளவு வசதிகள் இருந்தும் அவற்றைச் சரியான வகையில் பயன்படுத்தாததைப் பற்றிக் கவலைப் படலானான் அன்று மாலை பாடசாலையில் கல்வியிலும் விளையாட்டிலும் சாதனை புரிந்தவர்களுக்குப் பரிசளிப்பு விழா நடைபெற்றது. அதற்கு பிரதம அதிதியாக மாகாணத்தில் விளையாட்டுத்துறை அதிகாரி வந்திருந்தார். அவர் தனது உரையில் இளமைக்காலத்தில் தான் தனது பாடசாலைக் கட்டணங்களுக்காகப் பட்ட சிரமங்களையும் தனது பரீட்சைக் கட்டணங்களுக்காகத் தனது தந்தை பட்ட சிரமங்களையும் எடுத்துக் கூறினார்.

ஒரு கட்டத்தில் இறுதியாண்டுக் கட்டணத்தை தனது நண்பன் கட்டியதாகவும் அவனது உதவியினால் தான் மேலும் படித்து உயர்ந்து இந்த நிலைக்கு வந்திருப்பதாகவும் கூறிய போது குமாரின் கண்களில் நீர் வந்து விட்டது அன்று வீடு சென்ற குமார் முருகனுடைய காலணிக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து மாகாண மட்டப் போட்டிலும் தேசிய மட்டப் போட்டிகளிலும் சாதனைகள் புரிந்து விளையாட்டுத் துறையிலும் கல்வியிலும் சாதனைகள் புரிந்து இன்று நாட்டில் உயர்ந்த பதவி வகிக்கிறான்.

குமாரும் அதன் பிறகு பல ஏழை மாணவர்களுக்கு உதவி புரிந்ததோடு தானும் கல்வியில் கவனம் செலுத்தி இன்று உயர் பதவி வகிப்பதோடு சமூக சேவையில் நாட்டில் முன்னணியில் இருக்கிறான். இன்று இருவரும் நாட்டில் பல மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

# 7. கதை கேட்டவன்

கண்ணன் குழந்தையாயிருக்கும் போதே தாயின் மடியில் படுத்துக் கொண்டே கதை கேட்பான். பின்பு தாயும் பாட்டியும் மாறி மாறிக் கதை சொல்லாமல் அவன் தூங்க மாட்டான். வளர வளர அவனுடைய கதை கேட்கும் ஆர்வம் அதிகரித்தது. தாயும் பாட்டியும் தங்களுக்குத் தெரிந்த கதைகளையெல்லாம் சொல்லி முடித்து விட்டார்கள். வேறு பலரிடமும் கதைகளைக் கேட்டுக் கண்ணனுக்குச் சொல்லி வந்தார்கள் ஒரு முறை சொன்ன கதையை மீண்டும் சொல்லி அவனை ஏமாற்ற முடியாது. பாடசாலைக்குச் சென்று வாசிக்கக் கூடிய ஆற்றல் வந்ததும் அவனுக்குச் சிறிய கதைப்புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தனர். பிறகு பத்திரிகைகளில் வரும் சிறுவர்களுக்கான கதைகளையும் கண்ணன் வாசிக்கத் தொடங்கி விட்டான். சிறுவர் சஞ்சிகைகளை வீட்டுக்கு வரவழைத்ததால் அவற்றில் வரும் சிறுவர்களுக்கான தொடர்களையும் வாசிக்கத் தொடங்கி விட்டான்.

இப்படியாகக் கண்ணனுடைய கதை ஆர்வம் அவனைப் பல புத்தகங்களைத் தேடிக் கதைகளை மட்டுமின்றி பெரியார்கள் வரலாறு மற்றும் அறிவியற் கட்டுரைகளையும் வாசித்துப் பயன் பெற உதவியாயிருந்தது. இப்படியாகக் கண்ணனுக்குத் தானும் கதை எழுத வேண்டும் அது பத்திரிகையில் வெளியாக வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. முதலில் வறுமைச் சூழலில் பிறந்து வளர்ந்த சிறுவன் ஒருவன் தொழில் செய்து கொண்டே கல்வி கற்றுச் சமூகத்தில் உயர்நிலையை அடைந்ததைக் கருவாக ஒரு கதை எழுதினான். சந்தாதாரராக இருந்த சிறுவர் மலர் என்ற சஞ்சிகைக்கு அனுப்பினான். அடுத்த மாதத்தில் அந்தப் பத்திரிகையில் அந்தக் கதை வெளியாய போல அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்தச் சஞ்சிகையை எடுத்தச் சென்று பாடசாலையில் நண்பர்களிடமும் ஊரிலுள்ளவர்களிடமும் கண்ணன் காட்டினான்.

பாடசாலைப் படிப்பை முடித்துக் கல்லூரிப் பாடிப்பைத் தொடர்ந்த கண்ணன் கூடுதலாகக் கதை வாசிப்பதிலும் பத்திரிகை

சஞ்சிகைகளுக்கும் தனது நேரத்தைச் செலவழித்தான். அவனுடைய கல்லூரிப் பெறுபேறுகள் குறைவடையவே ஆசிரியர்களால் கண்டிக்கப்பட்டான்.

இந்நிலையில் அவனுடைய பல கதைகள் பல சஞ்சிகைகளில் வெளியாகியது. சிலவற்றிற்குப் பரிசுகளும் கிடைத்தன. ஆனாலும் அவனுடைய கல்லூரிச் செயல்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை அதிபரினால் கண்டிக்கப்பட்டதே அவன் கல்லூரியை விட்டு வெளியேறினான். அவனுடைய தாயாரினால் இந்நிகழ்ச்சியைத் தாங்க முடிய வில்லை அடுத்த நாளே அவனுடைய கதையொன்றிற்கு ரூபாய் 1000ம் தொகையும் தங்கப் பதக்கமும் பரிசு கிடைத்தது. என செய்தி வந்தது இதைத் தொடர்ந்து போட்டியை நடத்திய பத்திரிகையாளர் கண்ணனை அழைத்து தனது பத்திரிகையில் 300 ரூபா சம்பளத்துடன் உதவி ஆசிரியராக நியமித்தது.

உள் நாட்டுப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிநாட்டுச் சஞ்சிகைகளிலும் கண்ணனின் கதைகள் வெளியாயின படிப்படியாக வானொலியில் நாடகம், கவிதை முதலியன வெளியாயின பலவற்றிற்குப் பரிசுகளே கிடைத்தன. விருதுகளும் பல அவனைத் தேடி வந்தன. அவனுடைய வாசகர்கள் நாடெங்கிலும் பரவலாக இருந்தனர். பல சஞ்சிகைகள் அவனுடைய ஆக்கங்களைப் போட்டி போட்டுப் பிரசுரித்தன.

எவ்வாறாயினும் மகன் கல்வியில் உயர் நிலையை அடைய வேண்டும் என்ற எண்ணம் நிறை வேறாமல் போனதில் மனமுடைந்த தாய்க்கு அம்மா இதுவரை எனக்குப் படிக்கவும் கதை எழுதவும் நேரம் போதவில்லை. இப்போது எனக்கு இரண்டுக்கும் நிறையவே நேரம் உண்டு. நான் அஞ்சல் வழிகளின் மூலம் கற்று பல பட்டங்களையும் பெற்றுச் சிறந்த கல்வியாளனாக வருவேன் என்று உறுதி கூறியதும் தாயார் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.

# 8. ஆற்றல்கள்


சரவணன் குழந்தைப் பருவத்திலிருந்தே வித்தியாசமான சுபாவமுடையவனாக இருந்தான். அவனுடைய பொழுது போக்குகள் ஏனைய குழந்தைகளை விட எப்போதும் வேறுபட்டே இருந்தது. மற்றக் குழந்தைகள் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்கும் போது சரவணன் தனியாக உட்கார்ந்து ஏதோ ஒரு பொருளை ஆராய்ந்து கொண்டிருப்பான். வளர வளர அவனுடைய இந்தச் செயலும் கூடிக் கொண்டே வந்தது. வீட்டிலும் பாடசாலையிலும், விளையாட்டுச் சாமன்களையும் மற்றும் பாடசாலை உபகரணங்களையும் பகுதி பகுதியாகப் பிரித்து ஆராயத் தொடங்கினான்.

சிறு வயதிலே தான் விளையாடுவதற்காகச் சில விளையாட்டுப் பொருட்களை மாற்றி அமைத்தான். சில விளையாட்டுப் பொருட்களைத்தானே உருவாக்கினான். அவன் உருவாக்கும் காற்றாடிகள். வண்டிகளைப் பார்த்து பெரியவர்கள் ஆசியர்கள் வியந்துள்ளனர்.

ஒரு முறை சரவணனுடைய வீட்டில் கிணறு கட்டும் வேலை நடந்து கொண்டிருந்த போது சீமேந்துக் கற்களைக் கிணறு கட்டுமிடத்துக்கு 30 மீற்றர் தொலைவிலிருந்து எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. அதைச் தொழிலாளர் தினமும் சுமந்து சென்றனர் தூரம் குறைவானதாக இருந்தாலும் சிரமமும் செலவானதுமாக இருந்த அந்த வேலையை அவதானித்த சரவணன் கற்களை ஒர் இலகுவான முறையைக் கண்டு பிடித்தான். கற்கள் இருந்த இடத்தில் ஒரு கம்பமும் கிணற்றடியிலும் ஒவ்வொரு கம்பமும் நாட்டி இரண்டையும் ஒரு நைலோன் கயிற்றினால் இனைத்தான். கற்கள் 3 அடி குறைவாக இருந்தது. ஆகவே நைலோன் கயிறு கற்கள் இருந்த இடத்திலிருந்து கிணற்றை நோக்கிச் சரியாகச் சென்றது கயிற்றில் வழுக்கிச் செல்ல விடப்பட்ட வளையம் ஒன்றில் கூடையொன்றில் கற்கள் வைக்கப்படக் கூடை கிணற்றை நோக்கி வழுக்கிச் சென்றது. கூடை கிணற்றடியை அடைந்து.

கற்கள் இறக்கப்பட்டு மீண்டும் கூடை உரிய இடத்துக்குக் கொண்டு வரப்பட்டுக் கற்கள் ஏற்றப்பட்டன.

சரவணனுடைய இந்தக் கண்டுபிடிப்பு பல இடங்களுக்கும் பரவி பல இடங்களிலும் இம்முறை பழக்கத்துக்கு வந்து சரவனுடைய புகழ் பாடசாலையிலும் ஊரிலும் பரவியது. பாடசாலையில் சரவணன் பல தொழில் நுட்பங்களைப் பயன் படுத்தி பல வேலைகளை இலகு வாக்கினான். அதுவரை உயர்பட்டப் படிப்புக்களையே இலக்காகக் கொண்டிருந்த மாணவர் சமூகத்தில் பெற்றோர்களிடத்தும், தொழிநுட்பத்திலும் அது தொடர்பான கல்வியிலும் ஈடுபாடு அதிகமாகியது. சரவணன் தனது கண்டு பிடிப்புக்களுக்காகப் பாடசாலைக் காலத்திலேயே மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் பரிசுகளையும் விருதுகளையும் பெற்றான். இன்று விவாசயத் திணைக்கள ஆராய்ச்சிப் பிரிவில் அதி உயர்ந்த பதவி வகிக்கும் சரவணன் நாட்டின் உயர்ந்த கல்வியாளர்களில் ஒருவனாக விளங்குகின்றான். அவனது பெயரில் அவன் கற்ற பாடசாலைகள் சரவணனின் தேசிய தொழில்நுட்பத் துறை ஈர்த்து வழி காட்ட எல்லோரும் சரவணனையே வழிகாட்டியாகக் கொள்கின்றனர்.



# 9. காட்லா தங்கக் கரை

தென்னிந்தியாவின் கடற்கரைக் கிராமமான இராமேஸ்வரத்தை அண்டிய ஒரு சிற்றூரில் வேலன் என்று ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான் அவனுடைய குடும்பம் மிகவும் வறியது. ஐந்து பேர் கொண்ட அந்தக் குடும்பத்தில் தகப்பன் சுப்பையா கடற்றொழிலில் கூலி வேலை செய்து வந்தான். வலைகளில் மீன் கழட்டுதல், மீன்களைத் தரம் பிரித்துச் சேகரித்தல் போன்ற கூலி வேலைகளில கிடைக்கும் சொற்ப வருமானம் அக் குடும்பம் சீவிப்பதற்குப்போதுமானாதாக இருக்கவில்லை.

கடற்கரைக்கு அண்மையில் வசித்து வந்ததால் வேலலும் மாலை வேலைகளிலும் விடுமுறை நாட்களிலும் தகப்பனுடன் வேலைக்குப் போவான். அவர்கள் வசித்த இடத்திலிருந்து சிறிது தொலைவில் ஒரு சிறிய துறைமுகம் இருந்தது. அங்கே பல நாட்டுக் கப்பல்கள் வந்துபோகும். பெரிய கப்பல்கள் கரைக்கு வரமுடியாததால் தொலைவில் நங்கூரமிட்டு நிற்கும். அதிலிருந்து வெளிநாட்டவர் வள்ளங்களில் கரைக்கு வருவார்கள்.

வெளிநாட்டவர்கள் தங்கள் நாட்டில் கிடைக்கும் அபூர்வப் பொருட்களை இங்குள்ளவர்களுக்குக் கொடுத்து இங்குள்ளவர்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்வார்கள். வெளிநாட்டவர் கொடுக்கும் பிஸ்கெற், சிகரெட், சொக்லெற், கைக்கடிகாரங்களைப் பெற்றுக்கொண்டு இவர்கள் சங்கு, சிப்பி போன்ற கடலில் கிடைக்கும் பொருட்களையும் அவற்றினால் செய்த கைப்பணிப் பொருட்களையும் கொடுப்பார்கள். பனம் பொருட்களிலிருந்து செய்யப்டும் கைப்பணிப் பொருட்கள் காட்டு விலங்குகளின் கொம்புகள் தோல்களிலிருந்து செய்யப்படும் பொருட்களையும் வெளிநாட்டவர் விரும்பி வாங்குவர் வெளிநாடுகளிலிருந்து வருபவர்களில் ஐரோப்பியர், அரேபியர், ஆபிரிக்கக் கறுப்பினத்தவர், ஆகியோர் இருந்தனர். ஆபிரிக்கக் கறுப்பினத்தவர் கூடுதலாக ஐரோப்பியரின் கப்பல்களில் பணியாட்களாக வேலை பார்ப்பவர்களாக இருந்தனர். கடற்கரைக் கிராமங்களில் வாழும் பலரைப் போல வேலனும் தான் உள்ளூரில் சேகரித்த பொருட்களை வெளிநாட்டு வர்த்தகர்களிடம் கொடுத்து அவர்களிடமிருந்து பெற்றவற்றை உள்ளூரில்

விற்றும் ஓரளவு பணம் தேடிக் கொண்டான். இப்படியாகத் தொடர்ந்து நடந்து வருகையில் பல உள்ளூர் வாசிகளுக்கும் வெளிநாட்டவருக்கும் பழக்கமும் பின்னர் நட்பும் ஏற்பட்டு விட்டது.

வேலன் ஆபிரிக்கக் கப்பல் ஒன்றில் பணியாளராக வந்த ஆபிரிக்கச் சுதேசி ஒருவருடன் நீண்ட காலம் தொடர்புவைத்திருந்ததால் இருவருக்குமிடையில் அது ஆழ்ந்த நட்பாக மாறி விட்டது. காட்லா என்ற பெயருடைய அந்தக் கறுப்பினத்தவர் இங்கு வரும்போது வேலனுடைய வீட்டுக்கும் வருவார். இப்படியாக வந்து பழகியதில் வேலனுடைய பெற்றோர் சகோதரருடனும் நன்கு பழகி அவர்களுடைய மொழியிலும் ஓரளவு பேசத் தொடங்கிவிட்டார்.

ஒரு முறை பேச்சு வாக்கில் தங்கள் ஊருக்கு ஒருமுறை வந்து போகுமாறு வேலனை அவர் அழைக்க வேலனும் ஆர்வத்துடன் சம்மதிக்க அந்த முறையே அவர் ஆபிரிக்கா போகும் போது வேலனும் கூடப்போவதாகமுடிவாகி விட்டது. குறிப்பிட்ட தினத்தில் பெற்றோர், சகோதரர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வேலன் காட்லாவுடன் புறப்பட்டுவிட்டான். காட்லாவுடன் படகில் சென்று அந்தப் பாய் மரக்கப்பலில் ஏறும்வரை எல்லாம் புதினமாகவே இருந்தது. நீராவிக்கப்பல்கள் போக்கு வரவில் வரத் தொடங்கி விட்டாலும் பாய் மரக்கப்பல்களும், ஏராளம் போக்குவரவில் பயன்பட்டு வந்தன. காட்லா பணிபுரிந்த கப்பலும் பாய்மரக் கப்பலாகவே இருந்தது.

கயிற்று ஏணிகளில் ஏறிச் சென்று கப்பலின் தளத்தை அடைந்தபோது அங்கே மரங்களைத் தாங்கிக் கொண்டிருந்த கனதியான உயர்ந்த கம்பங்களும் பிரமாண்டமான பாய்களும் பலமான கயிறுகளும் வேலனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தன. கப்பலில் பணிகளில் ஈடுபட்டிருந்த பணியாளர்களின் நீல வெள்ளை நிறச் சீருடைகளும் கறுத்த தொப்பிகளும் அவர்கள் வேலையில் காட்டிய சுறு சுறுப்பும் நடையெல்லாம் அவனை மிகவும் கவர்ந்தன.

அந்த வருடம் நடுப்பகுதியில் வேலனின் தந்தைக்கு ஏற்பட்ட சுகயீனம் மாறாமல் நீடித்தது. சாதாரணமாகத் தொடங்கிய காய்ச்சல் எவ்வித மருந்துக்கும் கட்டுப்படாமல் மாதக் கணக்காக நீடித்தது. கப்பலில் வேலைக்குச் சென்ற வேலன் விடுமுறைக்கு வீட்டுக்கு

வந்தபோது தந்தையின் நிலையைக் கண்டு வீட்டிலே தங்கி விட்டான். தந்தைக்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு சகோதரிகளுடன் தந்தையைப் பராமரித்த வேலனுக்குக் கப்பலையும் மாலுமிகளையும் விட்டுப் பிரிந்திருப்பது விரக்தியைக் கொடுத்தது. அத்தோடு காட்லாவையும் சந்திக்க முடியவில்லை.

காட்லா ஏனோ ஒரு காரணத்தால் இந்தியா வரவில்லை என்பதை வேலன் உணர்ந்து கொண்டான். சிறிது காலத்தில் நோயின் உபாதையாலும் வயோதிபத்தாலும் வேலனின் தந்தை காலமாகி விட்டார். அவர் இறந்து ஒரு மாதத்தின் பின் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று வந்திருப்பதாக வேலன் கேள்விப்பட்டான், கடற்கரையில் தொலைவில் நிற்பதையும் கண்டான் அது வந்து சிறிது நேரத்தின் பின் அதிலிருந்து கரைக்கு வந்த படகில் இருந்தவர் இறங்கித் தங்கள் வீடு நோக்கி வருவதை வேலன் கண்டான். அருகில் வந்ததும் அது காட்லா என்பதை வேலன் கண்டு ஆச்சரியப்பட்டுத் அவனுக் கட்டித் தழுவிக் கொண்டான்.

காட்லா இந்தியா வராதிருந்த காரணத்தைத் தெரிவித்தபோது வேலன் மகிழ்ச்சியும் ஆச்சரியமு மடைந்தான். இது வரை 'கோல்ட் கோல்ட்' தங்கக் கரை என்று வெள்ளையர்களால் அழைக்கப்பட்ட 'கானா' என்ற நாடு சுமந்திரமடைந்து விட்டதாகவும் பல வெள்ளையர்கள் தாங்கள் உரிமையாக்கி வைத்திருந்த தங்க வைரச் சுரங்கங்களை அவற்றின் உரிமையாளர்களான முன்னோரின் வழித்தோன்றல்களுக்கு இல வசமாகக் கையளித்துச் சென்றதாகவும் அதன் படி தங்கள் மூதாதையரின் பரம்பரை நிலங்களில் கண்டு பிடிக்கப்பட்ட சுரங்கங்களை அதை வைத்திருந்த இங்கிலாந்து நாட்டவர் தங்கள் குடும்பதுக்குத் தந்து விட்டதாகவும் அதன் படி தனது பங்குக்கு வளமிக்க ஒரு வைரச்சுரங்கம் கிடைத்ததாகவும் காட்லா கூறினார். காட்லா இப்போது பல நீராவிக் கப்பல்களின் உரிமையாளன் அவர் தன்து அன்புப் பரிசாக ஒரு நீராவிக் கப்பலையே வேலனுக்குக் கொடுத்துவிட்டார். வேலனின் வறுமையோடு கடல் கப்பல் பற்றிய அவனது கனவுகளும் நனவானது.

# 10. கூட்டுறவு

சாந்திபுரம் என்ற அந்த ஊரில் ஏறத்தாள அறுபது குடும்பங்கள் இருந்தன. கிராமப்புறமான அந்த ஊரில் இப்போது சில வருடங்களாகத்தான் ஒரு ஆரம்பப்பாடசாலை உருவாகி இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஊரில் முருககேசு என்பவருடைய மகன் மாதவன் படித்துக் கொண்டிருக்கிறான். அந்த ஊரில் கற்றவர்கள் மிகக்குறைவு. ஆண்டு 8க்கு மேல் படிப்பதென்றால் நகரத்திற்குச் சென்று படிக்க வேண்டும். அந்தப் பாடசாலை 15மைல் தொலைவில் இருக்கிறது. அங்கு சென்று தங்கிக் கல்வி கற்க வசதியுள்ளவர்கள் யாருமில்லை.

கல்வி அறிவு குறைந்த காரணத்தால் அந்தக் கிராமம் பல வருடங்களாக அபிவிருத்தி எதுவுமின்றியே இருக்கிறது. சுகாதார வசதிகளும் மிகக்குறைவு. ஊரெங்கும் குப்பைகள் நிறைந்திருக்கும். வீடுகள், தெருக்களெல்லாம் குப்பைக் குவியல்களாகக் காட்சியளிக்கும். சொறிநாய்கள் தெருவெங்கும் கட்டுப்பாடின்றித் திரியும். நுளம்புகள் பல்கிப் பெருகியிருக்கும். சாக்கடை வசதிகளின்றி அசுத்த நீர் கண்ட இடங்களில் தேங்கியிருக்கும். பல தொற்று நோய்களும் அடிக்கடி பரவும்.

ஒரு முறை அந்த ஊருக்குச் சமூகம் அளித்த சுகாதார அதிகாரி ஊர்ப் பெரியவர்களையும் அரச சேவையிலுள்ளவர்களையும் அழைத்து ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். அந்தக் கூட்டத்தில் அவர் கிராமம் சுத்தமாக இருக்காவிட்டால் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றி விளக்கமாகக் கூறினார். ஒரு ஊரைச் சுத்தமாக வைத்திருப்பது மக்களின் கடமை எவ்வளவுதான் அரசாங்க அதிகாரிகளின் உதவி கிடைத்தாலும் ஊர் மக்களின் சேவையால்தான் ஊரைச் சுத்தமாக வைத்திருக்க முடியும். அதற்கு அவ்வூர் இளைஞர்கள் முன்னின்று உழைக்க வேண்டும் என்றும் கூறினார்.

ஏற்கனவே சமூகசேவையில் நாட்டமுள்ள மாதவனின் உள்ளத்தில் அவருடைய உருக்கமான பேச்சு நன்கு பதிந்தது. அவன் மறுநாளே நண்பர்கள் சிலரைச் சேர்த்துக் கொண்டு தன் ஊரின் அபிவிருத்தியில் ஈடுபடத் தொடங்கினான்.



Distributed By :
LANKA BOOK DEPOT (Pvt) Ltd.
F.L. 1. 14, Dias Place,
Gunasingapura,
Colombo 12.
Tel : 011-2-341942

Price : 50.00